புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# பாமாவின் படைப்புகளில் தலித் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள்

**முனைவர் சி. ஆரோக்கிய தனராஜ்,**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி – 620 002.
**(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது)**

**ஆய்வுச்சுருக்கம்**

இந்திய மகளிர் நிலை அமெரிக்க நாட்டினது சட்டத்திட்டத்தின் பார்வையில் கறுப்பின அடிமை மகளிர் நிலையைவிட இழிந்தாக ஆக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட நிலையில் இந்தியத் தலித் மக்கள் வாழ்விழந்து, முகமிழந்து, தாம் வாழும் வாழ்நாளில் பலவகையான கொடுமைகளையும் சந்தித்துச் சிக்கித்தவிக்கும் இரங்கத்தக்க வாழ்க்கை நிலையைப் படம் பிடித்துக்காட்டும் படைப்பாளர்கள் பலர். அவர்களுள் தலித் பெண்படைப்பாளரான பாமா தமது புதினப்படைப்புகளில் தலித் பெண்கள் எவ்வாறு ஆதிக்கச் சாதியினராலும், ஆண்களாலும் வீட்டுக்குள்ளும், வீட்டுக்குவெளியிலும் பல்வேறு வேலைகளைச்செய்து தமது வாழ்க்கையை நடத்தும் அவர்களது அவலங்களைக் நடைமுறை வாழ்வின் ஒளிவுமறைவற்ற எதார்த்த நிலையோடு, எவ்வாறெல்லாம் வன்முறைகளுக்கும், பாலியல் வன்புணர்ச்சிகளுக்கும் ஆளாகின்றனர் என்பதை அவரது படைப்புகளில் பதிவுசெய்துள்ளார்.

**குறிச்சொற்கள்**

***குழந்தைஉளவியல்-பெண்ணியம்-பாலியல்அத்துமீறல்-விளிம்புநிலைப்பெண்கள்-குடும்ப வன்முறை***

***இந்தியாவில் குழந்தைப் பாலியல் வன்முறைகள்:***

*குழந்தை பாலியல் வன்முறை என்பது ஆண்களும் பெண்களும் தங்கள் பாலியல் உணர்வுகளுக்கு வடிகால்களாகக் குழந்தைகளைப் பயன்படுத்திக் கொள்வதாகும்.*

***பாலியல் வன்முறைகள் பற்றி மத்திய அரசின் அறிக்கை:***

*மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் 2007ஆம் ஆண்டில் பதின்மூன்று மாவட்டங்களில் குழந்தைகள் மீதான அத்து மீறல் நடத்திய ஆய்வறிக்கையில் 53.22 சதவிகிதம் குழந்தைகள் ஒன்றுக்கு மேற்பட்ட ப்hலியல் வன்முறைக்கும் 50.76 சதவிகிதம் குழந்தைகள் மிகுதியான பாலியல் வன்முறைக்கும் ஆளாகின்றார்கள் என்றும், அஸ்ஸாம்;, ஆந்திரபிரதேசம், தில்லி, பீகார் முதலிய இடங்களில் இருக்கும் குழந்தைகள் பாலியல் வன்முறைகளால் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்றும் தெரியவந்துள்ளது. மற்றொரு புள்ளி விவரத்தில் ஒவ்வொரு பதின்மூன்று மணிநேரத்திற்குள் பத்து வயதிற்குப்பட்ட ஒரு குழந்தையும், ஒவ்வொரு இரண்டரை மணிநேரத்திற்குள் பதினாறு வயதிற்குட்பட்ட குழந்தைகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகின்றார்கள். ஆக இந்தியாவில் பத்தில் ஒரு குழந்தை பாலியல் வன்முறையில் பாதிக்கப்படுகினறனர்.*

***இளம் வயது திருமணத்தின் மீதான வன்முறைகள்:***

*இந்திய நாட்டில் குமரிப்பெண்கள் சந்திக்கும் சிக்கல்களில் மிகவும் முக்கியமானது இளம் வயது திருமணம். வயதுக்கு வந்த பெண்ணை வீட்டில் வைத்திருப்பது நெருப்பை வயிற்றில் கட்டிக்கொண்டுள்ளதுபோல் இருக்கிறது என்று கூறி பன்னிரண்டிலிருந்து பத்தொன்பது வயதிற்குள்ளளான சிறுமிகள் திருமணம் நடத்தும் கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இந்தியாவில் பூப்பெய்தியவுடன் 1.5 மில்லியன் பெண்களுக்குத் திருமணம் நடத்தப்படுகிறது.*

***குடும்ப வன்முறைகள்:***

*“பெண்களுக்கு இழைக்கப்படும் பல வன்;முறைகளில் மிகக் கொடுமையானது ‘குடும்ப வன்முறைகள்’. ஆனால் சமூகத்தில் இவ்வன்முறை மிகச் சாதாரணமானதாகவும் அங்கீக்கரிகப்பட்டதாகவும் கருதப்படுகிறது. குடும்ப வன்முறை என்பது பெண்களின் நெருங்கிய உறவினர்களான கணவன், தந்தை, மகன், உடன்பிறந்தோர் முதலியவர்களால் வீட்டிலேயே*

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறை ஆகும். பெண்களை அடிப்பது, கொச்சைவார்த்தைகளால் திட்டுவது, மிரட்டுவது, உதைப்பது, கையில் கிடைக்கும் பொருட்களைப் பெண்கள்மேல் தூக்கி எறிவது, பட்டினி போடுவது, வீட்டுக்குள் பூட்டி வைப்பது, தனிமைப்படுத்துவது, விழாக்களில் பங்கெடுக்கவிடாமல் தடுப்பது, தற்கொலை செய்யத் தூண்டுவது, உடலுறவு கொள்ள மறுப்பது, வற்புறுத்தி உடலுறவு கொள்வது, வேலைக்குச் செல்ல அனுமதிக்காமல் இருப்பது, தாழ்த்திப் பேசுவது, மனம் புன்படுமாறு பேசுவது, சமய நம்பிக்கையைக்கேலி பேசுவது என்று குடும்ப வன்முறையின் வடிவங்கள் விரிகின்றன.'' என்று 'திமிறி எழு' நூலாசிரியர் முனைவர் அ. ஜெயசீலி குறிப்பிடுகின்றார். இதன் அடிப்படையில் பாமாவின் 'சங்கதி' புதினத்தில் தலித் பெண்களை மட்டுமே முதன்மைப்படுத்தி எழுதுகின்றார். ஆண் பாத்திரப்படைப்புகள் துணைப் பாத்திரங்களாகவே காணப்படுகின்றனர்.

**வீட்டில் கணவனால் ஏற்படும் வன்கொடுமைகள்:**

'கருக்கு' புதினத்தில் ''சம்பாதிக்கும் பணத்தில் குடித்து விட்டு பலவழிகளிலும் செலவழித்துவிட்டு வரும் கணவனுக்கு, தான் உழைத்து சம்பாதித்துக் கொண்டு வரும் பணத்தில் சோறு போட்டு, தன்குழந்தைகளையும் தன்னையும் காப்பாற்றிக் கொள்ளும் தலித் பெண்கள் பல வகையிலும் உயர்ந்தவர்களாய் விளங்குகிறார்கள்'' என்று தலித் இலக்கியம் ஒரு பார்வை நூலாசிரியர் பத்மாவதி விவேகானந்தன் குறிப்பிட்டுள்ளதை நோக்கும் போது, இன்றைய நிலையில் தமிழகத்தில் ஒடுக்கப்பட்ட தலித் சமூகத்தில் உள்ள சில ஆண்களின் உழைப்பில் கிடைக்கும் ஊதியத்தைக் குடித்து விட்டு குடும்பத்தைக் கவனிக்க மறந்த நிலையைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். இதே நிலையைப் புதின ஆசிரியர் பாமா குறிப்பிடுகையில் ''பெரும்பாலான தலித் ஆண்கள் பகல் முழுவதும் கடினமான உடலுழைப்பில் ஈடுப்பட்டுதான் பொருளீட்ட வேண்டிய சூழலில் இருக்கின்றனர். இவ்வாறு உடல்நோக வேலைசெய்யும் போது சாதி, பணம், அதிகாரத்திமிர் கொண்ட பண்ணையார், முதலாளிகளின் ஆணவத்துக்கும் அடக்கமுறைகளுக்கும் அடிபணிந்தாக வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளபடுகின்றனர். உடலும், உள்ளமும் நொந்து, வெந்துபோன நிலையில் கிடைக்கும் கூலியைக் குடியிலேயே செலவழித்துவிட்டு, வீட்டில் வந்து தன் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்ட மனைவி, குழந்தைகளிடம் மல்லுக்கட்டுவதும், அடித்துத் துன்புறுத்துவதும் வாடிக்கையாக நிகழும் வன்கொடுமையாகவே காணமுடிகிறது'' என்று எழுதுகின்றார்.

**பெண்களுக்கு வெளியில் ஏற்படும் வன்கொடுமைகள்:**

பெண்கள் வீட்டைவிட்டு வெளியில் தமது கடமைகளைச் செய்து வருவதற்குள் எப்படிப்பட்ட வன்கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றார்கள் என்பதை, ''காடு கரைகளில் உள்ள ஆதிக்க சாதிக்காரர்களிடமிருந்து தப்பிக்கணும், கோயில் காரியங்களில்; இந்த சாமியார் கால்களை

நக்கிவிட கடவுள், மோட்சம், நரகம் என்று அவன் பயங்காடரதுனால அவனுக்கு அடிமையாய்க் கெடக்கணும், வீட்டிற்கு வந்தாலும் கஞ்சியக் காச்சுனமா குடிச்சமா, படுத்தமான்னு இல்லாம புருசங்காரனுட்ட இம்சப்படனும்" என்று குறிப்பிடப்படும் நிகழ்வுகளில் தலித் பெண்கள் பொறுமையிழந்து, குடும்பச்சூழலுக்காகத் தங்களையே இழந்து போன பெண்களின் குரலாக இந்தப் புதினத்தின் வாயிலாகக் கேட்கமுடிகிறது.

**தலித் பெண்களைத் தனிமைப் படுத்தும் நடைமுறைகள்:**

பருவம் அடைந்த பெண்களை முதியோர்களின் கட்டுப்பாடுகளால் வீடுகளில் அடைக்கப்பட்டுக் கிடக்கும் பெண்கள் எண்ணற்றோர் உள்ளனர் என்றும் அறிவியல் வளர்ந்து விட்டகாலக்கட்டங்களில் கூட இத்தகைய இழிநிலை கூடாது என்ற கருத்தைப் பாமா வெளிப்படுத்தும் நிலையில் "எங்கய்யா எனயெல்லாம் போகும், நாங்ககேட்டா பொம்பளப் பிள்ளகள அங்குட்டு இங்குட்டு கூட்டிட்டுப் போகக் கூடாதுங்குது" என்று பதிவு செய்துள்ளார். இத்தோடு மட்டுமின்றி ஆண்கள் இருக்கும் இடத்திற்குப் பெண்கள் செல்வது குற்றம் எனப் பல குடும்பங்களில் பெரியவர்கள் கருதுகின்ற மனநிலையில் 'சங்கதி' புதினத்தில் "இவனுகிட்ட என்னத்தப் பேச முடியது, தெருஞ்ச நாயத்தைக் கூட இவனுககிட்ட சொல்ல வழி இல்ல. ஊர்க்கூட்டத்துல நம்மள ஒக்கார உடமாட்டானுக. ஓரமா இங்ஙன ஒதுங்கி நிக்கக் கூட உடமாட்டேனுக. இவனுக வீரத்த நம்மகிட்டத்தான் காட்டுவானுக. போயி அந்த மொதலாளிமார்ட காட்டச் செல்லுப்பாக்கேன்" என்று சூசையம்மாள் அறைகூவல் விடுக்கிறார். இதன் மூலம் பெண்களைத் தனிமைப்படுத்தும் நிலையை வெளிப்படுத்தியுள்ளார். இந்தக் கருத்திற்கு வலுச்சேர்க்கும் தன்மையில் அறிஞர் அந்தோனி குருசு, அண்ணல் அம்பேத்கரின் பெண்;ணியச் சிந்தனைகள் என்னும் கட்டுரையில் "மகாத்மா நாட்டுபந்தலில் கூடியிருந்த 3000 தலித் பெண்கள் 1927 நவம்பர் 27 அன்று இந்தியாவில் முதன்முறை அணிதிரண்டபோது அவர்களைப் பாத்ததும் மனம் குமுறினார்" என்று குறிப்பிடுவதிலிருந்து காலந்தோறும் ஆண்கள் தலித் பெண்களைத் தனிமைப்படுத்துவதையும், தலித்பெண்கள் கொடுமைகளை எதிர்த்து ஒன்று கூடுவதையும் கண்டு **தமது எதிர்ப்புகளை வெளிப்படுத்தியுள்ளனர் என்பது தெளிவு.**

**தலித் பெண்கள் மீதான வன்புணர்ச்சிகளும் தண்டனைகளும்**

தலித் பெண்களின் மீதான பாலியல் வன்புணர்ச்சி வன்கொடுமைகளை ஆபாசச் சொற்களைக் கூறல், சில்லறைச் சேட்டைகள் புரிதல், வன்புணர்ச்சி செய்தல் என மூன்று வகையாகப் பகுக்கலாம் என்று கிறித்தவ ஒடுக்கப்பட்டோர் புதினங்களின் போக்கு என்ற கட்டுரையில் உ. இராசு குறிப்பிட்டுள்ளார். தொடக்க நிலையாக அல்லது முன்னோட்டமாக முதலிரண்டு குற்றங்களும் பெரும்பாலும் அமைகின்றன. தலித் மக்களின் ஏழ்மை, பாதுகாப்பற்ற நிலை, சாதிய இழிவு இவற்றைச் சாதகமாகக் கொண்டு வன்புணர்ச்சிக்குக் கட்டாயப்படுத்துகின்ற

போக்குகள் சமுதாயத்தில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இதற்குச் சான்றாகப் பாமாவின் *'சங்கதி'* புதினத்தில் ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டப்படுகிறது. *"ஆதிக்கசாதியைச் சேர்ந்த குமாரசாமி மரியம்மாவைக் கையைப் பிடித்துப் பாலியல் உறவுக்காக அறைக்குள் இழுத்தார். ஆனால், அவள் தப்பித்து ஓடிவந்து விட்டாள் இந்தத் தவறை மறைக்க அவளுக்கும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணிக்கத்திற்கும் தொடர்பு உண்டு அதைத்தாமே நேரில் பார்த்ததாகக் குமாரசாமி தலித் சமூகத்து மக்களிடம் கூறிவிட்டார். மாரியம்மாளும், மாணிக்கம் இருவரும் செய்யாத குற்றத்திற்காக ஊர்ப்பஞ்சாயத்து முன் நிறுத்தப்படுதிறார்கள், ஊர்ப்பஞ்சாயத்தில் விசாரிக்கும்போது மாரியம்மாள் என்ற பெண்ணுக்கு எதிராக ஆண்கள் பேசியும் எரனூறு ரூவாயும் தெண்டம் போட்டதாகப்"* பதிவு செய்துள்ளார். அவர் பிள்ளையிடம் சொல்லவும், *"மாரியம்மாள் இத வெளி சொல்லம இருக்குறதுதான் ஒனக்க நல்லது. நடந்ததச் சொல்லப் போனா ஒனியத்தான் அவசாரி சாட்டுவாக. பேசாம வா!"* என்று தன்னைக் கெடுக்க வந்த மனிதனைக் காட்டிக்கொடுக்க முடியாத அளவுக்கு ஏழ்மையும், சாதியும் அச்சத்தை ஏற்படுத்தித் தடுத்துவிடுவதைப் பாமா தமக்கு உரித்தான எளிய நடையில் சித்திரித்துள்ளார். இதேபோல் தலித் பெண்கள் மீதான வன்புணர்ச்சியில் ஆதிககசாதியினர் நிலையாக அறிஞர் அந்தோனி குருசு தமது கட்டுரையில் *"90 சதவீதம் தலித் பெண்கள் பார்ப்பனீய நிலக்கிழார்களின் கீழ் கூலி வேலை செய்துதான் பிழைத்து வருகிறார்கள். அறியாமையில் மூழ்கியுள்ள இப்பாமர தலித் பெண்களைப் பண்ணையார்கள் தங்கள் பாலுறவு வெறிதணிக்கும் கருவிகளாகுமாறு கட்டாயப்படுத்துகிறார்கள் இறுதியில் அவர்களைச் சோரம் போனவர்கள் என முத்திரைகுத்தி தூக்கி எறிகிறார்கள்!"* என்று குறிப்பிட்டுள்ளார்.

தலித் பெண்கள் மீது சமூகத்தில் நடைபெறுகின்ற வன்புணர்ச்சி வன்கொடுமைகள் இன்றளவும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன என்பது புலப்படுகிறது. மேலும், பாமா *'கருக்கு'* என்னும் புதினத்தில் தாம் வேலைக்குச் சென்ற இடத்தில் தமக்கு நேரிட்ட நிகழ்ச்சியை விளக்கும் போது, *"அங்க ஒரு கன்னியாஸ்திரி நீங்க நாடாரான்னு கேட்டுச்சு. இல்ல நாங்க பறையர்னு சென்னேன். அது மூஞ்சி போன போக்க பாத்தா இன்னைக்குக் கூட சிரிப்பா வருது. அங்க இருந்த கன்னியாதிரிகள்ள முக்காவாசிப்பேரு தெலுங்குகாரிதான். அதனால் எங்களைபோல் தலித்துகளக் கண்டா அதுகளுக்குப் புடிக்கிறதில்ல. பெறகென்ன, அங்க வேலை செஞ்ச அஞ்சு வருசமும் பேராட்டாந்தான்"* என்று நடைமுறைகளைப் பதிவு செய்வதிலிருந்து கிறித்தவ ஒடுக்கப்பட்டபெண் மக்கள் துறவறவாழ்விலும் தீண்டாமைக் கொடுமைப் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுவது தொடர்கிறது. கிறித்தவ ஒடுக்கப்பட்ட பெண்கள் என்ற ஒரே காரணத்தால் ஓரங்கட்டப்படுகிறார்கள். தங்களது திருச்சபையாலேயே தொடர்ந்து சிலுவையில் அறையப்படுகிறார்கள். அரசின் சட்டத்திருத்த மறுப்பால் வாழ்வுரிமை மறுக்கப்பட்ட நிலையில் தாங்கள் இருக்கிறோம் என்றே வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**முடிவுரை**

ஆதிக்கசாதிக் கட்டுமானங்களே தலித் பெண்களை அடிமை, அழகற்றவள், கீழான வேலைகளைச் செய்யப்பிறந்தவள், தீட்டு மிக்கவள் என்ற கற்பிதங்களை உருவாக்குகின்றன. அதனால் தலித் பெண்ணைக்குற்ற உணர்வும், தன்விதி என்ற மனப் பான்மைய்யும் உண்டாக்கி ஆதிக்கச்சாதி ஆண்களின் அதிகாரத்திற்கும் பாலியல் வன்முறைகளுக்கும் ஆட்படுவளாகவும் எதிர்க்கத் துணிவில்லாதவளாகவும் மாற்றப்படுகிறனர். ஆனால் இவ்அனைத்து வன்கொடுமைகளையும் எதிர்க்க வேண்டும் என்ற உள்ளுணர்வு இடைவிடாது துடித்துக் கொண்டே இருக்கிறது. இவ்வெதிர்ப்புணர்வைக் கலகக் குரலைச் சங்கதிப் புதினத்தில் வெள்ளையம்மா பாட்டியின் பேச்சிலும், பண்ணையாரின் குடிநீர்க் குடத்தில் சிறுநீர்;கழித்த சம்முகக் கிழவியின் செயலிலும் காணமுடிகிறது.

**தீர்வுகள்**

- குழந்தைகளை முறைகேடாகப் பயன்படுத்தும் நோக்குடன் தீயதொடுதல் முறை, தூக்கிக் கொஞ்சுதல், முத்தம் கொடுத்தல், தொட்டுவிளையாடுதல் போன்ற செயல்களைப் பற்றி பெண்குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும்; விழிப்புணர்வை உண்டாக்கவேண்டும்.

- முன்பின்தெரியாதவர்கள் தனியே அழைத்துப்போய் குழந்தைகளுக்கு விலையுயர்ந்த பொருட்களை வாங்கிக் கொடுத்தல், அவர்களிடம் கொஞ்சிப் பேசி அன்பு காட்டுவதுபோல நடித்தல் ஆகிய போக்கிலிருந்து குழந்தைகளைப் பெற்றோர்கள் பாதுகாத்தல் வேண்டும்.

- பாதுகாப்பான தொடுதலுக்கும், பாலியல் வன்முறை தொடுதலுக்குமிடையே வேறுபாடுகளைக் குழந்தைகளுக்குப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அறிவுறுத்தல் வேண்டும்.

- பெண்ணைத் தம் அதிகார எல்லைக்குள் அடக்கி ஆதிக்கம் செய்ய வேண்டுமென்ற ஆதிக்கமன போக்கு, கோபம், எரிச்சல், மனஉளைச்சல் ஏற்படும் போதெல்லாம் ஆண்கள் தங்கள் உணர்வுகளுக்கு வடிகால்களாகப் பெண்களின் உடலையும் மனநலத்தையும் துன்புறுத்திப் பயன்படுத்தும் மனப்பாங்கில் மனித உரிமை நடவடிக்கை தேவை.

- பாலியல் அத்துமீறல்கள் குடும்பங்களில் ஏற்படும்போது அவற்றை இரகசியமாக வைத்துப் பாதுகாக்காமல், வெளியே சொல்லி வன்முறையாளர்களைத் தடுத்தால்தான் இத்தீமையைச் சமூகத்திலிருந்து அகற்ற முடியும்.

**துணை நின்ற நூல்கள்**


*1. அன்புக்கரசி, மோகன் லார்ப்பீர் (தொ.ஆ)* — *தலித் பெண்ணியம், தலித் ஆதார மையம், தமிழ்நாடு இறையியல் கல்லூரி, மதுரை – 625 010 டிசம்பர் 1997.*

*2. பாமா* — *கருக்கு, சமூக சிந்தனை செயல் ஆய்வு மையம், (ஐடியாஸ்) மதுரை, 1992.*

*3. பாமா* — *சங்கதி, சமூக சிந்தனை செயல் ஆய்வு மையம், (ஐடியாஸ்) மதுரை, 1994.*

*4. பத்மாவதி விவேகானந்தன்* — *தலித்இலக்கியம் ஒரு பார்வை (தொகுதி இரண்டு), ராஜம் வெளியீடு, பு.எண் 112ஃ34, ப.எண் 139ஃ34, வி. ஆர். பிள்ளைதெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005, முதல் பதிப்பு டிசம்பர் 2016.*

*5. ஜெயசீலி* — *திமிறி எழு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட் 41—டீ சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட் அம்பத்தூh, சென்னை – 600 098, முதறப்பதிப்பு மே 2011.*

*5. தமிழ்த்துறை, (ப.ஆ)* — *வளன் ஆயம் தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 002. இதழ் - 10 மார்ச் 2006.*


***************